அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 191 /2016
தேதி : 22.12.2016

**நாடார் சமுதாயம் பற்றி தவறான உண்மைக்கு புறம்பானதாக இடம்பெற்றிருந்த பாடப்பகுதி நீக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இது போன்ற நிகழ்வு முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

சி.பி.எஸ்.இ. 9-ம் வகுப்பு சமூக அறிவியல் பாட புத்தகத்தில் இந்தியன் காலனி ஆதிக்கம் என்ற தலைப்பில் உள்ள பாடத்தின் 168-வது பக்கத்தில் நாடார் சமுதாயத்தை பற்றி தவறாக சித்தரிக்கப்பட்ட தகவல்கள் இடம்பெற்றிருந்தன. இந்த தவறான தகவல்கள் அடங்கிய பகுதியை நீக்கவேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி கண்டனம் தெரிவித்தது. மறைந்த முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களும், மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார். பல்வேறு தரப்பினர்களும் அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

இதனை தொடர்ந்து நாடார் சமுதாயம் பற்றி இழிவாக இடம்பெற்றிருந்த பாடப்பகுதி முற்றிலும் நீக்கப்படுவதாகவும், இது பற்றி எந்த ஒரு வினாவும் தேர்வுக்கும் கேட்கப்படாது. இது பற்றி பள்ளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தெரிவிக்கப்படும் என்றும், தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இந்திய திருநாட்டில், எந்த ஒரு சாராரையும் தனிப்பட்ட முறையில் பாதிக்கும் அளவுக்கு எந்த ஒரு பாடதிட்டமும் எக்காலத்துக்கும் அமைந்துவிடக்கூடாது. மேலும் இந்திய வரலாற்றையும், கலாச்சாரத்தையும் ஒவ்வொரு இந்தியனும் பெருமை கொள்ளும் வகையிலும் உலகமே திரும்பிபார்க்கும் அளவிலும் இருக்கும்போது, இதுபோன்ற பாடத்திட்டங்களை எக்காலத்திலும் அனுமதிக்காதவகையில், இதனை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் கவனமாக பார்த்துக்கொள்ளவேண்டும்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்